بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹு¬ல்லாஹு¬த் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் 17/12/2021 அன்று U.K - இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜு¬முஆ பேருரையின் சுருக்கம்**

## ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்களைப் பற்றிய நற்குறிப்பு - தொடர் 3

أَشْهَدُ أَنْ لَّآ إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ۔ أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ۔

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ۝١ اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ۝٢ اَلرَّحْمٰنِ الرَّحِيْمِ ۝٣ مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ۝٤ إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِيْنُ ۝٥

اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ۝٦ صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ ۙ غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ۝٧

ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்களைப் பற்றிய நற்குறிப்பில் அடிமைகளை விடுதலை செய்த, இன்னும் சில சம்பவங்கள் உள்ளன. அன்னார் நஹ்தியா மற்றும் அவர்களின் மகளை, சொல்லப்பட்ட விலைக்கு வாங்கி விடுதலை செய்து விட்டார்கள். இவ்வாறே அப்போது வரை முஸ்லிம் ஆகியிருக்காத ஹஸ்ரத் உமர் பின் கத்தாப் (ரலி) அவர்கள் முஅம்மல் கோத்திரத்தைச் சேர்ந்த ஓர் அடிமைப் பெண்ணுக்குக் கஷ்டம் கொடுத்துக் கொண்டிருந்தார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் அந்தப் பெண்ணையும் விடுவிக்கச் செய்தார்கள்.

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் தந்தை ஒருமுறை அன்னாருக்கு, 'நீங்கள் ஆற்றல் படைத்த ஆண்களை விடுதலை செய்ய வையுங்கள். அவர்கள் உங்களுக்கு உதவி புரிவார்கள்' என்று ஆலோசனை வழங்கினார்கள். இதற்கு அன்னார், 'நானோ மேன்மையும் கண்ணியமும் மிக்க அல்லாஹ்வின் தன்னிறைவையே நாடுகிறேன்' என்று பதில் அளித்தார்கள். அல்லாமா குர்துபீ, அல்லாமா ஆலூஸீ மற்றும் சில திருக்குர்ஆன் விரிவுரையாளர்கள், 'சூரா 'அல் லைல்' உடைய فَاَمَّا مَنْ اَعْطٰى وَاتَّقٰى முதல் وَ لَسَوْفَ يَرْضٰى வரையிலான இந்த வசனங்கள் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் இந்த அமல் காரணமாகவே அன்னாரின் மேன்மை குறித்து இறங்கின' என்று கூறுகிறார்கள்.

பொருள்: ''எனவே, எவர் (இறை வழியில்) கொடுத்து இறையச்சத்தை மேற்கொண்டு, சிறந்த நன்மைக்கு சான்றளித்தாரோ நிச்சயமாக, நாம் அவருக்கு வசதியை வழங்குவோம். ஆனால் எவன் கருமித்தனம் செய்து, அலட்சியம் செய்து, சிறந்த நன்மையைப் பொய்ப்படுத்தினானோ; நிச்சயமாக, நாம் அவனை நெருக்கடியில் ஆழ்த்தி விடுவோம். அவன் அழிவிற்குள்ளாகும் போது, அவனது செல்வம் அவனுக்கு எந்தப் பயனும் அளிக்காது. நிச்சயமாக, நேர்வழி காட்டுவது எந்நிலையிலும் எமது பொறுப்பாகும். நிச்சயமாக, முடிவும் ஆரம்பமும் எமது அதிகாரத்துக்கு உட்பட்டவையாகும். எனவே, கொழுந்துவிட்டெரியும் நெருப்பைப் பற்றி உங்களுக்கு நான் எச்சரிக்கை செய்கிறேன்.

(உண்மையைப்) பொய்ப்படுத்தி, புறக்கணிக்கின்ற மிகப் பேறிழந்தவனைத் தவிர வேறெவனும் அதில் நுழைய மாட்டான். மேலும், மிகுந்த இறையச்சமுடையவர் அதிலிருந்து நிச்சயம் காப்பாற்றப்படுவார். அவரோ தாம் தூய்மையடைய தமது செல்வத்தை (இறை வழியில்) வழங்குகிறார். மேலும் எவருக்கும் திருப்பிச் செய்ய

வேண்டிய பேருதவி எதுவும் அவருக்கு இராது. அவர் (தமது செல்வத்தை) மிக்க மேன்மைக்குரிய தமது இறைவனின் தன்னிறைவை நாடிய வண்ணமே செலவு செய்கின்றார்). விரைவில் (அவரைப் பற்றி) அவன் திருப்தியடைவான்.''

**ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்லூத் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் கப்பாப் பின் அரத் (ரலி) அவர்கள் விடுதலை செய்யப்பட்ட சம்பவத்தை எடுத்துரைத்தவாறு கூறுகிறார்கள்:** ஒரு காலத்தில் அடிமையாக இருந்த ஹஸ்ரத் கப்பாப் (ரலி) அவர்களின் முதுகு மிகவும் கடினமானதாகவும் எருமை மாட்டின் தோலைப் போன்று சுரசுரப்பானதாகவும் இருப்பதை ஒரு நபர் பார்த்தார். அவர் வியந்து போனார். அதைப் பற்றி விசாரித்த போது ஹஸ்ரத் கப்பாப் (ரலி) அவர்கள் கூறினார்கள்: இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டதனால் எங்கள் எஜமான் எங்களைக் கொதிக்கும் வெயிலில் படுக்க வைத்து அடிப்பான். மிகவும் கடினமான மற்றும் சுரசுரப்பான கற்களில் போட்டு இழுப்பான். நீங்கள் பார்த்தது, அந்த அடி உதை மற்றும் இழுக்கப்பட்டதன் விளைவுதான்.

ஆண்டாண்டு காலமாக அவர்கள் மீது அநீதியிழைக்கப்பட்டது. கடைசியல், ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் தமது சொத்தின் பெரும் பகுதியை விற்று அவர்களை விடுவித்து விட்டார்கள்.

**ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்லூத் (ரலி) அவர்கள் பிறிதொரு சந்தர்ப்பத்தில் கூறுகிறார்கள்:** ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மீது ஈமான் கொண்ட அடிமைகளில் ஹஸ்ரத் பிலால் (ரலி) அவர்களைப் போன்ற அபீஸீனியாவைச் சேர்ந்தவர்களும் இருந்தார்கள். ஹஸ்ரத் ஸுஹைப் (ரலி) அவர்களைப் போன்ற ரோமாபுரியைச் சேர்ந்தவர்களும் இருந்தார்கள். ஹஸ்ரத் ஜுபைர் (ரலி) அவர்கள் மற்றும் ஹஸ்ரத் ஸுஹைப் (ரலி) அவர்களைப் போன்ற கிருத்தவர்களும் இருந்தார்கள். ஹஸ்ரத் பிலால் (ரலி) அவர்கள் மற்றும் ஹஸ்ரத் அம்மார் (ரலி) அவர்களைப் போன்ற இணைவைப்பாளர்களும் இருந்தார்கள். ஹஸ்ரத் பிலால் (ரலி) அவர்களை அவர்களின் எஜமான் கொதிக்கும் மணலில் கிடத்தி, அவர்களுக்கு மேல் ஒன்று பாறையை வைத்து விடுவான்; அல்லது நெஞ்சில் ஏறி குதிப்பதற்காக இளைஞர்களை நியமித்து விடுவான். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் அந்த மக்கள் மீது இழைக்கப்பட்ட இந்தக் கொடுமைகளைப் பார்த்த போது, விலையைக் கொடுத்து அவர்களை விடுதலை செய்ய வைத்துவிட்டார்கள்.

நிராகரிப்பாளர்களின் அநீதிகள் எல்லை கடந்த போது ஹுஸூர் (ஸல்) அவர்கள் நபவீ ஐந்தாம் ஆண்டு ரஜப் மாதத்தில் முஸ்லிம்களை அபீஸீனியாவுக்கு ஹிஜ்ரத் செய்யுமாறு வழிகாட்டினார்கள். எனவே, 11 ஆண்களும் 4 பெண்களும் அபீஸீனியாவுக்கு ஹிஜ்ரத் செய்து சென்றார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களும் ஹிஜ்ரத் செய்யும் எண்ணத்தில் புறப்பட்டார்கள். ஆனால், 'பர்குல் கமாத்' எனும் இடத்தில் காரா கோத்திரத்தின் தலைவர் இப்னு தஃகனா அன்னாரின் எண்ணத்தை அறிந்து அடைக்கலம் வழங்குவதாக உறுதியளித்து மக்காவிற்குத் திருப்பி அழைத்து வந்தார். மக்கா சென்றடைந்ததும் அவர் குறைஷியர்களின் தலைவர்களிடம், 'அபூ பக்ர் போன்ற மனிதரை நாட்டை விட்டு வெளியேற்றப்படுவதும் இல்லை; அவர் (தானாக) வெளியேறுவதும் இல்லை. நீங்கள், மறைந்து போன நன்மைகளை செயலாற்றும் ஒரு மனிதரையா வெளியேற்றுகிறீர்கள்? அவர் உறவுகளைப் பேணுகிறார். களைத்து சோர்ந்து போகின்றவர்களின் சுமைகளை சுமக்கிறார். விருந்தோம்பல் செய்கிறார்' என்று கூறினார்.

குறைஷியர்கள் இப்னு தஃகனாவின் அடைக்கலத்தை ஒப்புக் கொண்டனர். ஆனால், (அவரிடம்) 'நீங்கள் அபூபக்ரிடம் அவர் தனது இறைவனைத் தனது வீட்டிலேயே வணங்குமாறு கூறுங்கள்' என்று கூறினர். இதற்குப் பிறகு ஹஸ்ரத்

அபூபக்ர் (ரலி) அவர்கள் தமது வீட்டிலேயே தொழுதும் திலாவத் செய்தும் வந்தார்கள். சில காலங்களுக்குப் பிறகு அன்னார் தமது வீட்டுடன் இணைந்திருந்த முற்றத்தில் இபாதத் செய்வதற்கான இடத்தை அமைத்துக் கொண்டார்கள். அங்கு இணைவைக்கும் பெண்களும் குழந்தைகளும் அன்னாரின் உருக்கமான இபாதத்தின் தன்மையை வியப்புடன் காண்பார்கள். இதனால், மக்கத்து குறைஷியர்கள் இப்னு தஃகனாவை எச்சரித்தார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் இப்னு தஃகனாவிடம், 'நான் தங்களுடைய அடைக்கலத்தைத் திருப்பித் தருகிறேன். அல்லாஹ்வின் அடைக்கலத்திலேயே திருப்தி காண்கிறேன்' என்று கூறினார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் தமது முற்றத்தில் அமைத்துக் கொண்ட பள்ளிவாசல் தொடர்பாக சஹீஹ் புகாரியின் விரிவுரையான 'உம்தத்துல் காரி'யில், 'இந்தப் பள்ளிவாசல் வீட்டின் சுவர்கள் வரைப் பரவியிருந்தது; மேலும், இதுதான் இஸ்லாத்தில் கட்டப்பட்ட முதல் பள்ளிவாசல்' என்று எழுதப்பட்டுள்ளது.

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் 'ஷைப் அபீ தாலிப்' என்ற இடத்திலும் கண்ணியத்திற்குரிய ஹுஸூர் (ஸல்) அவர்களுடன் இருந்தார்கள். ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் சாஹிப் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: இந்த இக்கட்டான சூழ்நிலைகளிலும் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுடன் இருப்பதை விடவில்லை.

ஹஸ்ரத் இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: غُلِبَتِ الرُّوْمُ ۙ فِىْٓ اَدْنَى الْاَرْضِ எனும் வசனங்கள் இறங்கிய போது இணைவைப்பாளர்கள், பாரஸீகர்கள் ரோமானியர்களை வெற்றி காண வேண்டும் என்று விரும்பினர். ஏனெனில், அவர்களும் சிலை வணக்கம் செய்து வந்தனர். ஆனால், முஸ்லிம்களோ ரோமானியர்கள் பாரஸீகர்களை வெற்றி கண்டுவிட வேண்டும் என்று விரும்பினர். ஏனெனில், ரோமானியர்களும் வேதத்தை உடையவர்களாக இருந்தார்கள். கண்ணியத்திற்குரிய தூதர் (ஸல்) அவர்கள், ரோமானியர்கள் நிச்சயம் வெற்றி பெற்று விடுவார்கள் என்று கூறிய பிறகு, ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் இணைவைப்பாளர்களுடன் பந்தயம் போட்டுக் கொண்டார்கள்.

சஹீஹ் புகாரியில் கண்ணயித்திற்குரிய தூதர் (ஸல்) அவர்களின் எத்தகைய நான்கு முன்னறிவிப்புகள் பற்றிக் கூறப்பட்டுள்ளது என்றால், அவை மிகவும் கம்பீரமான முறையில் நிறைவேறின. இந்த முன்னறிவிப்புகளில் ரோமாபுரியின் வெற்றி தொடர்பான முன்னறிவிப்பும் உள்ளது. ஹஸ்ரத் மஸ்ரூக் கூறுகிறார்கள்: நாங்கள் ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் மஸ்ஊத் (ரலி) அவர்களிடம் இருந்தோம். அவர்கள் கூறினார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மக்கள் முகந்திருப்புகிறார்கள் என்பதைப் பார்த்தார்கள். அப்போது அன்னார், 'அல்லாஹ்வே! எவ்வாறு நீ ஹஸ்ரத் யூஸுஃப் (அலை) அவர்களின் காலத்தில் ஏழு ஆண்டு கால பஞ்சத்தை ஏற்படுத்தினாயோ அவ்வாறே நீ இவர்கள் மீதும் பஞ்சத்தை ஏற்படுத்துவாயாக!' என்று கூறினார்கள்.

எனவே, அந்த மக்களுக்கு எந்த அளவு பஞ்சம் ஏற்பட்டது என்றால், அது எல்லாவற்றையும் இல்லாமற் செய்து விட்டது. எதுவரை என்றால், கடைசியில் அவர்கள் தோல், மரணித்த விலங்குகள் மற்றும் துர்நாற்றம் வீசும் பிணங்களைக் கூடத் தின்றார்கள். அவர்களில் எவரேனும் ஒருவர் விண்ணை நோக்கித் தன் பார்வையை செலுத்தினால், பசியின் காரணமாக அவருக்குப் புகை மட்டுமே தென்பட்டு வந்தது. அல்லாஹ் கூறினான்: "வானம் தெளிவான ஒரு புகையைக் கொண்டு வரும் அந்த நாளுக்காகக் காத்திருங்கள். நிச்சயமாக எந்நாளில் நாம்

பெரிய அளவில் பிடிப்போமோ அந்த நாளில் நீங்கள் இவற்றையே மீண்டும் செய்வீர்கள்.'' ஆகவே, இந்தப் பெரிய அளவிலான பிடி பத்ர் நாளில் ஏற்பட்டது. ஆக, புகையின் மூலமான தண்டனை, கடுமையான பிடி, லிஸாமா (தண்டனை) பற்றிய முன்னறிவிப்பு மற்றும் ரோமாபுரி தொடர்பான முன்னறிவிப்பு ஆகிய இந்த எல்லா விஷயங்களும் நடந்து விட்டன.

அல்லாமா பத்ருத்தீன் அய்னீ அவர்கள் எழுதுகிறார்கள்: ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுக்கும் அபூ ஜஹ்லுக்கும் இடையில் சில ஆண்டு கால அவகாசத்தை அடிப்படையாகக் கொண்டு பந்தயம் போடப்பட்டது. ஹுஸூர் (ஸல்) அவர்கள், '9 அல்லது 7 ஆண்டுகளைக் குறிக்கும் இடத்தில் தான் بِضْعِ என்ற சொல் பயன்படுத்தப் படுகிறது. எனவே, கால அவகாசத்தை அதிகரித்துக் கொள்ளுங்கள்' என்று கூறினார்கள். இதனால், ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் கால அவகாசத்தை அதிகரித்துக் கொண்டார்கள். கடைசியில் ரோமானியர்கள் வெற்றி பெற்று விட்டார்கள்.

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:**

بِضْعِ என்ற சொல் தொகுப்பு (ச் சொல்) ஆகும். மேலும், பெரும்பாலும் 9 ஆண்டுகள் வரை குறிக்கிறது.

**ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் சாஹிப் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:** இது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மக்காவில் இருந்த காலத்தில் நடந்த விஷயமாகும். ஹிஜ்ரத் நடந்திருக்கவில்லை. இதற்குப் பிறகு நிர்ணயிக்கப்பட்ட காலஅவகாசத்துக்கு உள்ளேயே திடீரென்று போர் தலைகீழாக மாறியது. ரோமானியர்கள் பாரஸீகர்களைத் தமக்குக் கீழ் ஆக்கி, சில காலங்களிலேயே தமது பகுதியைத் திரும்பப் பறித்துக் கொண்டார்கள்.

**ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:** ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுடன் சில நிராகரிப்பாளர்கள் நூறு நூறு ஒட்டகங்களைப் பந்தயம் கட்டினார்கள். வெளிப்படையாகப் பார்க்கும் போது, இந்த முன்னறிவிப்பு நிறைவேறுவதற்கான சாத்தியக்கூறு வெகு தொலைவில் சென்று கொண்டிருந்தது. ஆனால், தீர்ப்பளிக்கக்கூடிய போரில் ரோமானிய போர்வீரர்கள் எண்ணிக்கையிலும் போர்த் தளவாடங்களிலும் குறைந்தவர்களாக இருந்த போதிலும் திருக்குர்ஆனின் முன்னறிவிப்புக்கு ஏற்ப ஈரானியர்கள் மீது ஆதிக்கம் பெற்றனர்.

அல்லாஹ் ஹுஸூர் (ஸல்) அவர்களுக்கு அரபு கோத்திரங்களுக்குத் தப்லீஃக் செய்யுமாறு கட்டளையிட்ட போது அன்னார் ஹஜ் சந்தர்ப்பத்தில் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் மற்றும் ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களுடன் அவ்ஸ் மற்றும் கஸ்ரஜ் கோத்திரங்களின் மற்றும் இதர கோத்திரங்களின் சபைகளுக்குச் சென்றார்கள். அவர்களுக்குத் தப்லீஃக் செய்தார்கள். இவ்வாறே ஒரு ஹஜ்ஜின் போது அன்னார் பிக்ர் பின் வாயில் அவர்களை நோக்கி ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களைத் தப்லீஃக் செய்வதற்காக அனுப்பினார்கள்.

ஷைப்பான பின் ஸஃலபா என்ற ஒரு கோத்திரம் ஹுஸூர் (ஸல்) அவர்களின் இறையழைப்பினால் மிகவும் தாக்கமடைந்தது. ஆயினும், அவர்களின் தலைவர்களில் ஒருவரான முஸன்னா பின் ஹாரிஸா அவர்கள் தாம் கிஸ்ரா பேரரசனுடன் செய்து கொண்ட உடன்படிக்கையைப் பற்றிக் கூறினார். அதற்கு ஏற்ப அவர்கள் தாமும் எந்தப் புதிய வேலையையும் செய்ய முடியாமல் இருந்தது; மேலும், எந்தப் புதிய வேலை செய்பவருக்கும் அடைக்கலம் கொடுக்க முடியாமல் இருந்தது.

கண்ணியத்திற்குரிய ஹுஸூர் (ஸல்) அவர்கள் அந்த மக்களிடம், ‘ஒருவேளை சிறிது காலத்தில் அல்லாஹ் உங்களை கிஸ்ராவின் பூமிக்கு வாரிசாக்கி விட்டால், அப்போது நீங்கள் அல்லாஹ்வைப் புகழ்ந்து அவனது தூய்மையை எடுத்துரைப்பீர்களா?’ என்று கேட்டார்கள். இதைக் கேட்டதும் அவர்கள் இணங்கி விட்டார்கள். இறைவனின் வல்லமையைப் பாருங்கள்! கிஸ்ராவின் மீது மதிப்பச்சம் கொண்டு இஸ்லாத்தை ஏற்றுக் கொள்வதற்குத் தயக்கம் காட்டிய அதே முஸன்னா ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் கிலாஃபத் காலத்தில் கிஸ்ராவுடன் போர் நடக்கும் போது இஸ்லாமிய படையின் படைத்தளபதியாகத் திகழ்ந்தார்கள்.

*ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் நற்குறிப்பு இனிவரும் காலங்களில் தொடரும் என்று கூறிய பிறகு ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் ஆஃப்கானிஸ்தான் மற்றும் பாக்கிஸ்தானின் அஹ்மதிகளுக்காக துஆ செய்யுமாறு அறிவித்தவாறு கூறினார்கள்:*

ஆஃப்கானிஸ்தானில் அஹ்மதிகள் மிகவும் கஷ்டங்களைக் கடக்கின்றார்கள். சிலர் சிறைபிடிக்கவும் பட்டுள்ளனர். பெண்களும் குழந்தைகளும் தங்கள் வீடுகளில் மிகவும் கவலையடைந்துள்ளார்கள். சிறைபிடிக்கப்படாத, வெளியில் உள்ள ஆண்களும் வீடுகளை விட்டு வாழ்கிறார்கள். ஏனெனில், சிறைபிடிக்கப்படுவதற்கான அபாயம் இருக்கிறது. அல்லாஹ் அவர்களுக்கு எளிமைகளை ஏற்படுத்துவானாக! மேலும், அவர்களை இந்தக் கஷ்டத்திலிருந்து வெளியேற்றுவானாக!

பிறகு, பாக்கிஸ்தானின் அஹ்மதிகளுக்காகவும் துஆ செய்யுங்கள். அங்கும் பொதுவாகவே நிலைமைகள் மோசமாகவே இருக்கின்றன. எங்காவது ஏதாவது சம்பவம் நிகழ்ந்து விடுகிறது. அஹ்மதிகளுக்கு மக்கள் துன்பம் இழைக்கிறார்கள். இவ்வாறே ஒட்டுமொத்தமாகவும் துஆ செய்யுங்கள். அல்லாஹ் உலகத்திற்கு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை அடையாளம் காண்பதற்கு நல்வாய்ப்பு வழங்குவானாக! எல்லாத் தீங்குகளையும் முடிவுக்குக் கொண்டு வருவானாக! உலகம் தன்னைப் படைத்தவனின் உண்மைத்துவத்தை உணர்ந்து கொள்ளட்டுமாக! ஆமீன்!

இதற்குப் பிறகு ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கானாவின் முன்னாள் உமூரே ஆம்மா செயலரும் ஜல்ஸா சாலானாவின் மேலதிகாரியுமான மதிப்பிற்குரிய அல் ஹாஜ் அப்துர் ரஹ்மான் உயய்ன் சாஹிப் அவர்கள்; உர்துனைச் சேர்ந்த மதிப்பிற்குரிய அஸ்யாப் அலீ முஹம்மத் அல் ஜப்பாலீ சாஹிப் அவர்கள்; தற்போது கனடாவில் வசித்து வந்த, பணி ஓய்வுப் பெற்ற முரப்பி மதிப்பிற்குரிய தீன் முஹம்மத் ஷாஹித் சாஹிப் அவர்கள்; ஜல்ஸா சாலானா அலுவலகத்தின் ஊழியர் மியான் ரஃபீக் அஹ்மத் சாஹிப் அவர்கள் மற்றும் அமெரிக்காவின் முன்னாள் அமீர் ஜமாஅத் மதிப்பிற்குரிய இஹ்ஸானுல்லாஹ் ஸஃபர் சாஹிப் அவர்களின் துணைவியார் மதிப்பிற்குரிய கானித்தா ஸஃபர் சாஹிபா அவர்கள் ஆகிய இந்த அனைத்து மர்ஹூம்களின் நற்குறிப்பை எடுத்துரைத்து ஜனாஸா காயிப் தொழவைப்பதற்கான அறிவிப்பு செய்தார்கள். ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் அனைத்து மர்ஹூம்களின் மஃக்ஃபிரத் மற்றும் மேலான அந்தஸ்த்துக்காக துஆ செய்தார்கள்.

اَلْحَمْدُ لِلّٰهِ نَحْمَدُهٗ وَنَسْتَعِيْنُهٗ وَنَسْتَغْفِرُهٗ وَنُؤْمِنُ بِهٖ وَنَتَوَكَّلُ عَلَيْهِ وَنَعُوْذُ بِاللّٰهِ مِنْ شُرُوْرِ اَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ اَعْمَالِنَا مَنْ يَّهْدِهِ اللّٰهُ فَلَا مُضِلَّ

لَهٗ وَمَنْ يُّضْلِلْهُ فَلَا هَادِيَ لَهٗ وَنَشْهَدُ اَنْ لَّآ اِلٰهَ اِلَّا اللّٰهُ وَنَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ، عِبَادَ اللّٰهِ رحمكم الله اِنَّ اللّٰهَ يَاْمُرُ بِالْعَدْلِ وَالْاِحْسَانِ

وَاِيْتَآءِ ذِي الْقُرْبٰى وَيَنْهٰى عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْكَرِ وَالْبَغْيِ يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُوْنَ اُذْكُرُوا اللّٰهَ يَذْكُرْكُمْ وَادْعُوْهُ يَسْتَجِبْ لَكُمْ وَلَذِكْرُ اللّٰهِ اَكْبَرُ۔

**(தமிழாக்கம்: மௌலவி அத்தாவுல் முஃக்னீ)**